29th April 1959]

Central Road Development Fund

*184 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the amount received from the Central Road Development Fund for 1957–58 and for 1958–59, so far; and

(*b*) the schemes taken up under this "Head"?

The Hon. Sri P. KAKKAN: (*a*) A sum of Rs. 58,87,383 was received from the Central Road Fund in the year 1957–58. An allocation of Rs. 18,12,700 has so far been received for the year 1958–59.

(*b*) A list of schemes is placed on the table of the House.

Sri K. SATTANATHA KARAYALAR: இந்தப் பணத்தைச் செலவு செய்வதில் ஏதாவது நிபந்தனைகள் உண்டா? இன்னின்ன குறிப்பிட்ட விதத்தில் செலவு செய்யவேண்டுமென்று விதிகள் இருக்கின்றனவா?

The Hon. Sri P. KAKKAN: நிபந்தனை உண்டு. மத்திய சர்க்கார் அங்கீகாரம் பெற்றுத்தான்—"அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன்" வாங்கித்தான் செலவு செய்கிறோம். ஏற்கெனவே அவர்கள் சாங்ஷன் செய்த தொகைக்குமேல் 10 பர்சென்ட் அதிகமாக உயர்ந்தால், பர்மிஷன் வாங்கிச் செலவு செய்யவேண்டும்.

Sri A. VEDARATHNAM: மத்திய அரசாங்கம் கோடிக்கரை வேதாரண்யம் ரோடு திட்டத்திற்காக 4 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். அது என்ன நிலையில் இருக்கிறது? அந்த வேலை ஏன் இன்னும் துவக்கப்படவில்லை?

The Hon. Sri P. KAKKAN: கனம் அங்கத்தினர் கேட்கும் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி கேட்கவும்.

Sri J. MATHA GOWDER: மத்திய சாலை அபிவிருத்தி நிதியில் இருந்து—நீலகிரி ஜில்லா டிடூரிஸ்ட் பிரதேசமானதால்—அதிக நிதி ஒதுக்க அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri P. KAKKAN: நீலகிரி ஜில்லாவுக்குக் கூடுமானவரை உதவி செய்யப்படும்.

Sri K. SATTANATHA KARAYALAR: கன்னியாகுமரி ஜில்லாவுக்கும் பணம் ஒன்றும் ஒதுக்கியதாக மேஜை மேல் வைக்கப்பட்டிருப்பதிலிருந்து தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன?

The Hon. Sri P. KAKKAN: தனிக் கேள்வி போடவேண்டும்.

Mr. SPEAKER: 185, 186 கேள்விகள் கேட்ட அங்கத்தினர்கள் இடத்தில் இல்லாததால் இக்கேள்விகளும், அவைகளின் பதில்களும் சட்டசபை நடவடிக்கைகளில் பிரசுரிக்கப்படும்.

* Printed as Appendix I on pages 663—670 infra.